முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1301

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.04.2023, சனிக்கிழமை

1. தர்மத்தின் தலைவனே அரங்கா வாழ்க
தவபலம் கொண்டநல் தேசிகா வாழ்க
வறுமைகளை விரட்டி உலகமெல்லாம்
வாட்டமில்லா மக்களை தெளிவூட்டி ஞானவான்களாக
2. ஆகவே மாறுதல் செய்யும்பொருட்டு
அவதாரம் என் சக்தியாக எடுத்த அரங்கனே
உறுதிகொண்டு உந்தனுக்கு ஆறுமுகன் யான்
உரைத்திடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 09 ம் நாள், 22.04.2023 சனிக்கிழமை)
3. கருதிவந்து உன்பால் சரணாகதி
கலியுகத்தில் கொண்ட மக்களெல்லாம்
கடைத்தேறுவர் என்பது உறுதியப்பா
உறுதி தந்தேன் உன்னால் உலகமாற்றம்
4. உயர்வாக உன் தொண்டர்களைக்கொண்டு
ஆறுமுகன் யான் நடத்தி அருள்புரிவேன்
ஆக்கமாக அரங்கனைத் தேடிவரும் அன்பர்கட்கு
அழியாமை உறுதி ஆகும்
5. உறுதி தந்து உன்னுள் யானிருந்து
உலகோர்க்கு தீட்சையாக அருளிவர
கருதிவந்து ஓங்காரக்குடில் தன்னில்
கலியுகத்தில் உலகோர் சரணாகதி கண்டுவிட
6. கண்டுவிட உலகோர்க்கு பிறவிப்பிணி துன்பம்
கட்டாயம் அகன்றோடி பாதுகாப்பு
இடரில்லா இனி பிறவாத பேறும்
இயம்பிடுவேன் இனிதே அரங்கன் உன் ஆற்றலால் கண்டு

7. கண்டு உலகோர் வீடுபேறு காண்பர்
கலியுகத்தில் சர்வபலமும் அடைவர்
அடையவே அரங்கன் உன் உபதேசத்தில்
ஆறுமுகன் என்வேதம் கலந்திருக்க

8. தடையற உன்வழி உலகோர் தட்டாது
தொடர்ந்து வருகைபுரிந்தால் இடரின்றி இந்த கலியில் வாழ நேரும்
எல்லா சிக்கலும் அகன்றோடி அவரவர்க்கும் சர்வ பாதுகாப்பும்
அரங்கன் உன் தயவால் கிட்ட நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—